

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.09.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் “வேளாண் வணிகத் திருவிழா 2025” தொடங்கி வைத்து, வேளாண்மைஉழவர் நலத்துறை சார்பில் உழவர் சந்தை. ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், வேளாண் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் என பல்வேறு வேளாண் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து காட்சிப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தா.மோ.அன்பரசன், முனைவர் கோவி. செழியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.09.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் “வேளாண் வணிகத் திருவிழா 2025” தொடங்கி வைத்து, வேளாண்மைஉழவர் நலத்துறை சார்பில் உழவர் சந்தை, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், வேளாண் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் என பல்வேறு வேளாண் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து காட்சிப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தா.மோ.அன்பரசன், முனைவர் கோவி. செழியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## அ.தி.மு.க. – பா.ஜ.க. – பா.ம.க. கட்சிகளைச் சேர்ந்த

# 70-க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



சென்னை, செப்.29-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், பா.ஜ.க.வைச் சேர்ந்த மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் பேரம்பாக்கம் எஸ்.பகதூர் சேட் தலைமையில் காஞ்சிபுரம் மாநகராட்சி, 16வது வார்டு கவுன்சிலர் சாந்தி துரைராஜ், 27வது வார்டு கவுன்சிலர் ஷாலினி மற்றும் அ.தி.மு.க.வின் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர் வழக்கறிஞர் இ.ராஜன்காந்தி, பா.ம.க.வைச் சேர்ந்த வன்னியர் சங்க மாவட்டச் செயலாளர் ஜி.குமரன், ஒன்றிய முன்னாள் செயலாளர் பெரியாநத்தம் பெருமாள்(எ) ரமேஷ், இந்திய குடியரசு கட்சியின் மண்டல பொறுப்பாளர் சம்பத் உள்ளிட்ட அ.தி.மு.க. - பா.ஜ.க. - பா.ம.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (27.09.2025) காலை, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், பா.ஜ.க.வைச் சேர்ந்த மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவரும் - ஒன்றிய முன்னாள் தலைவருமான பேரம்பாக்கம் எஸ். பகதூர்சேட் அவர்கள் தலைமையில், காஞ்சிபுரம் மாநகராட்சி, 16வது வார்டு கவுன்சிலர் சாந்தி துரைராஜ், 27வது வார்டு கவுன்சிலர் ஷாலினி அ.தி.மு.க.வின் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணைச்செயலாளர் வழக்கறிஞர் இ.ராஜன்காந்தி பா.ம.க.வைச் சேர்ந்த வன்னியர் சங்க மாவட்டச் செயலாளர் ஜி.குமரன், ஒன்றிய முன்னாள் செயலாளர் பெரியாநத்தம் பெருமாள்(எ) ரமேஷ், இந்திய குடியரசு கட்சியின் மண்டல பொறுப்பாளர் சம்பத் உள்ளிட்ட அ.தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட மாவட்ட, ஒன்றிய மற்றும் அணி நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் க.செல்வம், எம்.பி., காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சிகேவி. தமிழ்செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கெ.ஞானசேகரன், டி.குமார், வி.ஏழுமலை, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.ராதாகிருஷ்ணன், ஆகியோர் உடனிருந்தனர்.

### பா.ஜ.க. – அ.தி.மு.க. – பா.ம.க. ஆகிய கட்சிகளிலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தவர்கள் விவரம்:

பா.ஜ.க.வைச் சேர்ந்த சித்தாமூர் ஒன்றியம், ஒன்றிய சிறுபான்மை அணி தலைவர் பி.அமீர்பாஷா, ஒன்றிய இளைஞர் அணித் தலைவர் எஸ்.பாஸ்கர், ஒன்றிய ஓபிசி அணி தலைவர் ஏ.சண்முகம், ஒன்றிய இளைஞர் அணி துணைத் தலைவர் கே.சௌந்தர்ராஜன், ஒன்றிய பொதுச்செயலாளர் டி.மாணிக்கம், ஒன்றிய எஸ்.சி.அணித் தலைவர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய எஸ்.சி.அணி துணைச் செயலாளர் கே.லோகநாதன், ஒன்றிய துணைத்தலைவர் ஏ.கமல், ஒன்றியச் செயலாளர் டி.சுந்தரவேல், ஒன்றிய துணைத்தலைவர் என்.வெங்கட்ராமன், ஒன்றிய மாணவர் அணிச் செயலாளர் எஸ்.பாலமுருகன், கிளைத் தலைவர் வி.அய்யாதுரை, வாக்குச்சாவடி முகவர் எஸ். செந்தில்குமார், கிளைத் தலைவர் பி.லோகநாதன், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் இ.ராஜேந்திரன்;

அ.தி.மு.க.வைச் சேர்ந்த சித்தாமூர் ஒன்றியம், முன்னாள் கிளைச் செயலாளர் எம்.அன்பழகன், கிளை முன்னாள் பிரதிநிதி ஜி.சசிகுமார், சிறுதாமூர் ஊராட்சி தேவிலால், மணிகண்டன், இ.மணிகண்டன், ஜெகத்ரட்சகன், அதி.மு.க. ஒன்றிய இளைஞர் அணி தலைவர் கே.தேவேந்திரன், முனைவர் சு.வெங்கடேசன், முனைவர் வெங்கடேசன், மேல்பாக்கம் ஊராட்சிமன்ற தலைவர் அஞ்சலை சம்பத், இளநகர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், கிளைச் செயலாளர் மோகன்தாஸ், கம்மாளம்பூண்டி கிளைச் செயலாளர் பிரபாகரன்,

மருத்துவர்கள் டாக்டர் சீனிவாசன், டாக்டர் திருமலைராஜ், டாக்டர் மோகனபிரகாஷ், டாக்டர் தமிழரசன், டாக்டர் ராம்ஜெயராஜ், டாக்டர் விக்னேஷ்; பொறியாளர்கள் ஜீவானந்தன், பி.இ., டால்அசாப், எம்.எஸ்சி., சையத்யூசுப், பி.இ., சையத்ஷன்வாஸ், பி.இ;

பா.ம.க.வைச் சேர்ந்த சாலவாக்கம் ஒன்றியச் செயலாளர் ஏ.நரேஷ், சித்தாமூர் ஒன்றிய துணைச் செயலாளர் வி.நாராயணன், ஒன்றிய விவசாய அணிச் செயலாளர் ஜி.முருகன், ஒன்றியக்குழு உறுப்பினர் ஜி.தாமோதரன், வன்னியர் சங்க ஒன்றியச் செயலாளர் ஆரியபெரும்பாக்கம் பாலு, மாநில மாணவர் அணி முன்னாள் செயலாளர் அருண்குமார், மாவட்ட மாணவர் அணி முன்னாள் செயலாளர் ஆர்.சந்திரசேகர், காஞ்சிபுரம் மாநகரம் 7வது வட்டச் செயலாளர் சுந்தர், நெற்குணம் ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ்செல்வி ராமலிங்கம் உள்ளிட்ட 70க்கும் மேற்பட்ட நிர்வாகிள் தி.மு.க.வில் இணைந்தனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், “தினசக்தி ” நாளிதழ் ஆசிரியர் - நிர்வாக இயக்குநர் கோமாபுரம் இரா.ப. சந்திரசேகரன் தி.மு.க.வில் இணைந்தார்.

முதலமைச்சர், கழகத் தலைவர்மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (27.09.2025) காலை, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், “தினசக்தி” நாளிதழின் ஆசிரியர் - நிர்வாக இயக்குநர் கோமாபுரம் இரா.ப.சந்திரசேகரன் தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே. எஸ்.இளங்கோவன், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.



### சமூக ஆர்வலர் சாசா தி.மு.க.வில் இணைந்தார்!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (27.-09.-2025) காலை, சென்னை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் சாசா தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது முதன்மைச் செயலாளர் கே.என்நேரு, துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

## மு.க.ஸ்டாலின் தலைமையில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்திட

# தொழிலாளர்கள் மாநிலம் முழுவதும் திண்ணைப் பிரச்சாரம்!

### கட்சியின் தலைவராக பொன்குமார் மீண்டும் தேர்வு! விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சியின் மாநிலப் பொதுக்குழுத் தீர்மானங்கள்!



சென்னை, செப்.29-

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் 23.09.2025 அன்று மதுரையில் கட்சியின் தலைவர் பொன்குமார் தலைமையில் நடைபெற்றது. இளைஞரணித் தலைவர் வினோத்குமார், மாநிலப் பொதுச்செயலாளர்கள் பொறி.எஸ்.ஜெகதீசன், ஜெகமுருகன், பொருளாளர் ஆர்.சேகர் ஆகியோர் முன்னிலையில் பொதுச் செயலாளர் என்.சுந்தராஜ் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் கீழ்கண்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**முதன்மை மாநிலம்– முதல்வருக்குப் பாராட்டு**

மகளிருக்கான உரிமைத் தொகை, இலவச பேருந்து பயணம், உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் 1000 உதவித்தொகை, காலை உணவு திட்டம், மக்களைத் தேடித் மருத்துவம், இல்லம் தேடி கல்வி போன்ற அரிய பல திட்டங்களை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தி இந்தியாவில் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை கொண்டு வந்து நிறுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்தப் பொதுக்குழு பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது.

**தமிழ்நாட்டை தலை நிமிரச் செய்த முதல்வர்**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திராவிட மாடல் அரசு அமைந்த பின் அந்நிய முதலீடுகளை ஈர்த்து, பெரிய அளவில் தொழிற்சாலைகளைத் தொடங்கி, சுமார் 40 இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி, இந்தியாவிலேயே அதிக அளவு பெண் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர் என்ற நிலை அடைந்து, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தி, தமிழ்நாட்டை தலை நிமிரச் செய்து, இந்தியாவின் தலை சிறந்த மாநிலமாக ஆக்கியுள்ள தமிழ்நாடு முதலமைச்சருக்கு இந்தப் பொதுக்குழு பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தி.மு.க ஆட்சி மீண்டும் தொடர திண்ணைப் பிரச்சாரம்**

2021ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, திராவிட மாடல் அரசு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் தலைமையில் பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்று வரை நிதி ஒதுக்கீடு உள்ளிட அனைத்திலும் ஒன்றிய அரசு தமிழ்நாடு ஒத்துழைப்பு தராமல் சண்டித்தனம் செய்து வருகிறது. ஆனால் முதல்வர் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து உலகம் பாராட்டக்கூடிய அளவிற்கு அதனை நடைமுறைப்படுத்தி தமிழ்நாட்டை அனைத்து நிலைகளிலும் முதன்மைப்படுத்தி வருகிறார்.

கல்வி, மருத்துவத்தில் தரம் மற்றும் முன்னேற்றம், புதிய தொழிற்சாலைகள் தொடக்கம், வேலை வாய்ப்பு பெருக்கம், இந்தியாவிலேயே அதிக பெண் தொழிலாளர் கொண்ட மாநிலமாக மாற்றியது, தனிநபர் வருமான உயர்வு, சிறந்த உள்கட்டமைப்பு போன்ற பல்வேறு துறைகளில் பெற்ற ஒட்டு மொத்த வளர்ச்சியின் காரணமாக தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதமாக ஆக உச்சத்தை எட்டி உள்ளது. 2016- 2021 காலகட்ட அதிமுக ஆட்சியின் போது தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5.2 ஆக இருந்த நிலையில் அதை தற்போது இரண்டு மடங்காக உயர்த்தி பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவிலேயே முதலிடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது.

இப்படிப்பட்ட தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைந்திட தி.மு.க. அணியின் வெற்றிக்கு கடும் களப்பணியாற்றுவது என இந்தப் பொதுக்குழுவில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்படுகிறது. இலட்சக்கணக்கானக் கட்டுமானத் தொழிலாளர்களின் குடும்ப வாக்குகளைப் பெரும் வகையில் வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என கட்சியினருக்கு இந்தப் பொதுக்குழு கட்டளையிடுகிறது.

**2026 சட்டபேரவைத் தேர்தலில் தி.மு.க அணியில் போட்டி**

தி.மு.க. தலைமையிலான அணியில் 2011-ஆம் ஆண்டு உத்திரமேரூர் சட்டப்பேரவை தொகுதியிலும், 2016-ஆம் ஆண்டு பண்ருட்டி சட்டப்பேரவை தொகுதியிலும் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் தலைவர் பொன்குமார் போட்டியிடுவதற்கான வாய்ப்பினை நல்கிய முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் மற்றும் இன்றைய முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோருக்கும் இந்தப் பொதுக்குழு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

2006-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று தமிழ்நாடு விவசாயிகள்- தொழிலாளர்கள் கட்சி திமுக அணியில் இணைந்து. அன்றிலிருந்து இன்று வரை எந்த சலனமுமின்றி, நம்பிக்கை உள்ள தோழமைக் கட்சியாக, மாறாமல் செயல்பட்டு வருகிறது. நடைபெற உள்ள 2026-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் வாய்ப்பான தொகுதியினை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சிக்கு ஒதுக்கீடு செய்ய திராவிட முன்னேற்றக் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கோரி பெற்று போட்டியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

**வாரியத்தில் வீடு வழங்கும் புதிய திட்டம்– பாராட்டு**

வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு ரூபாய் 4 லட்சம் இலவசமாக வழங்கும் அரிய திட்டம், மருத்துவக் கல்லூரியில் படிக்கிற மாணவ மாணவியர்களுக்கு கல்லூரி கட்டணம், விடுதி கட்டணம் மற்றும் இதர செலவுக்காக ரூபாய் 50,000 வழங்கும் திட்டம், பிள்ளைகளை விளையாட்டில் ஊக்கப்படுத்துவதற்கானத் திட்டம் குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவித் திட்டம் போன்ற புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தொழிலாளர் அமைச்சருக்கும் ஒருங்கிணைத்த வாரிய தலைவர் பொன்குமார் அவர்களுக்கும் இந்தக் கூட்டம் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

**வாரியத் தலைவர் பொன்குமாருக்குப் பாராட்டு**

அண்மையில் நடந்த கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய கூட்டத்தில்; ஈமசடங்கு நிதியை 5 ஆயிரத்தில் இருந்து 25,000 ஆக உயர்த்திடவும், கண் கண்ணாடி உதவி தொகையை 750 லிருந்து ரூபாய் 1500 ஆக உயர்த்திடவும், விபத்து மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெரும் காலங்களில் ஊதிய இழப்புத் தொகையாக ரூபாய் 25000 அளவிற்கு வழங்கும் திட்டம் போன்ற புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்திட தீர்மானம் நிறைவேற்றி, அரசு முன் மொழிவு அனுப்பிட ஏற்பாடு செய்த தலைவர் பொன்குமார் அவர்களுக்கு இப்பொதுக்குழு நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

**கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட் துறை– தனி அமைச்சகம்**

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கிய பங்கு வகிக்கக்கூடியது, விவசாயித்திற்கு அடுத்த படியாக பெருவாரியான மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக் கூடியது கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழிலாகும். எனவே நாட்டின் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள கூடிய கட்டுமானத்துறைக்கு மத்தியிலும், மாநிலத்திலும் தனி அமைச்சகத்தை ஏற்படுத்திட வேண்டும் என இந்தப் பொதுக்குழு ஒன்றிய, மாநில அரசைக் கேட்டு கொள்கிறது.

**கட்டுமானப் பொருட்களின் விலை நிர்ணயக்குழு**

கம்பி, சிமெண்ட். மணல் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலை அவ்வப் போது அபரிதமாக உயர்த்தப்படுகிறது. இதனால் இந்தத் தொழில் முடங்கி இலட்சக்கணக்கான மக்களின் வேலை வாய்ப்பு கேள்விக்குறியாகும் அபாயம் ஏற்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் முறையான விலையை நிர்ணயித்திட நிரந்தரமாக செயல்படும் வகையில் அரசு, உற்பத்தியாளர் மற்றும் கட்டுமானத் துறையினர் பங்கு பெற்றிடும் வகையில் விலை நிர்ணயக் குழு அமைக்கப்பட வேண்டும்.

**பசுமைக் கட்டுமானம்– சிறப்பு சலுகை**

உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பருவநிலை மாற்றத்தை குறைத்திட, பசுமைக் கட்டுமானத்தை ஊக்கப் படுத்திட வேண்டும். எனவே பசுமை கட்ட டத்திற்கு பதிவு கட்டணம், வரிவிதிப்பு போன்றவற்றிலிருந்து விலக்களித்தல், கட்டுமானப் பரப்பளவு கூடுதல் வழங்கல் போன்ற சிறப்பு சலுகைகள் வழங்கிட வேண்டும் என இப்பொதுக்குழு மத்திய, மாநில அரசுகளை கேட்டு கொள்கிறது.

**மீண்டும் கட்சியின் தலைவரானார் பொன்குமார் விவசாயிகள்– தொழிலாளர்கள் கட்சி- மாநில நிர்வாகிகள் தேர்வு**

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சிக்கு 2026-2029 காலகட்டத்திற்கான புதிய நிர்வாகிகள் தேர்தல் பொதுக்குழுவில் நடைபெற்றது. விவசாயிகள் தொழிலாளர் கட்சிக்குத் தலைவராக பொன்குமார் மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். தலைவர் பொன்குமார் தலைமையில் கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். பொதுச் செயலாளர்களாக என்.சுந்தராஜ், பொறி.எஸ். ஜெகதீசன், ஜெகமுருகன், வி. சுப்பராயலு, ஆர்.மகேஸ்வரி மற்றும் பொருளாளராக ஆர். சேகர் உட்பட 30 மாநில நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நேற்று முன்தினம் (27.09.2025) தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் 121வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதைச் செலுத்தினார்கள்.